### மக்களுக்கான திட்டங்கள் – கட்டமைப்புகள் என்று சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி

# தமிழ்நாட்டு அரசியல் களத்தை புரட்டிப் போட்ட தலைவர், மு.க.ஸ்டாலின்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற முதல்வர் பிறந்தநாள் விழாவில் – விடுதலை ராஜேந்திரன் புகழாரம்!

**சென்னை, ஏப்.26 -**

**“மக்களுக்கான திட்டங்கள் - கட்டமைப்புகள் என்று சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ்நாட்டு அரசியல் களத்தை புரட்டிப் போட்ட ஒரே தலைவர் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்” என்று திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை ராஜேந்திரன் சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவில் பேசும்போது கூறினார்.**

இவ்விழாவில் விடுதலை ராஜேந்திரன் அவர்கள் பேசியதாவது:-

தமிழகத்தில் இன்று நடந்து கொண்டிருக்கும் சமூக அரசியல் சூழலைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய பலரும் உங்களிடம் விரிவாக பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து சென்றிருக்கிறார்கள்.

தமிழ்நாடு இன்றைக்கு இந்திய அரசியலின் வரைபடத்தில் தனித்து நிற்கின்ற ஒரு போராட்டக்கள பூமியாக நெருப்பு பற்றி எரிந்து கொண்டிருக்கும் ஒரு பூமியாக வற்றிய சுடரை கையில் ஏந்தி நிற்கும் ஒரு பாசறையாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பாசறையின் படைத்தளபதியாக மக்கள் மத்தியில் நின்று கொண்டு,“நீ வா, ஒரு கை பார்க்கிறேன். உன்னுடன் எத்தனை படை வரிசைகள் வந்தாலும், அதை அழைத்துக் கொண்டு வாருங்கள்.Tamilnadu is out of Control” என்று ராணுவத்தையும் - அமலாக்கத் துறையையும் - சி.பி.ஐ.யையும் வருமான வரித்துறையையும் இன்னும் சொல்லப் போனால் சில நேரங்களில் நீதித்துறையையும், தன் கையில் வைத்துக் கொண்டிருக்கும் சர்வ வல்லமை உள்ள ஒரு சக்திக்கு சவால் விட்டிருக்கும் ஒரு முதலமைச்சர்; இந்திய வரலாற்றில் இப்படி ஒரு போர்க் குரலை நாம் கேட்டிருக்க முடியுமா என்று சொன்னால், நிச்சயமாக கேட்டிருக்க முடியாது.

இது ஏதோ சினிமாவில் வருகின்ற வசனம் போல நாம் கருதி விடக்கூடாது. இதற்குப் பின்னால் இருக்கும் அரசியல் ஞாயத்தையும், அதற்குப் பின்னால் இருக்கும் முதலமைச்சரின் உள்ள உறுதி அரசியல் அழுத்தம் கொள்கைத் தெளிவு இவைகளில் வழியாக வந்த முழக்கமாகத்தான் அதை நாம் பார்க்க வேண்டும்.

இந்த முழக்கத்திற்கு அவருக்கு இத்தகைய துணிச்சலை கொடுத்தது எது என்று சொன்னால், தமிழ்நாட்டில் இன்றைக்கு அவர் பின்னால் திரண்டு நிற்கும் மக்கள் சக்தி. நம்முடைய மக்கள் சக்தியின் வலிமை மீது மக்கள் சக்தியின் தோளின் மீது நின்று கொண்டுதான் இந்த முழக்கத்தை அவர் செய்து கொண்டிருக்கிறார். அந்த அளவிற்கு மக்கள் ஆதரவை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

### கலைஞர் எதிர்ப்பு ஒன்றுதான் அரசியல்!

தமிழ்நாட்டு அரசியலில் இப்போது ஏற்பட்டிருக்கும் சில மாற்றங்களைப் பற்றி சில கருத்துக்களை நான் பகிர்ந்து கொள்வது அவசியம் என்று கருதுகிறேன்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப்பிறகு, தமிழ்நாட்டு அரசியலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதிலிருந்து ஜெயலலிதா அம்மையார் ஆட்சியில் இருக்கும் வரை, தமிழ்நாட்டில் என்ன அரசியல் களமாக இருந்தது? தமிழ்நாட்டில் என்ன அரசியல் பேசப்பட்டது? இதை நீங்கள் கவனித்தீர்கள் என்று சொன்னால், கலைஞர் அவர்களுடைய எதிர்ப்பு அரசியல் ஒன்றுதான், தமிழ்நாட்டின் அரசியலாக இருந்தது.

எந்த மக்கள் பிரச்சினையும் எந்த மக்களுக்கான திட்டமும் எந்த மக்கள் வாழ்வுரிமைக்கான தேவைகளைப் பற்றிய கவலையும் எதுவும் இல்லாமல், கலைஞர் எதிர்ப்பு... கலைஞர் எதிர்ப்பு... கலைஞர் எதிர்ப்பு என்ற ஒற்றையில் நின்று கொண்டு, எம்.ஜி.ஆர். அவர்கள் காலமாக இருந்தாலும் சரி ஜெயலலிதா அவர்கள் காலமாக இருந்தாலும் சரி அதற்குப் பிறகு நான்காண்டுகள் ஆட்சி நடத்திய எடப்பாடி காலமாக இருந்தாலும் சரி, இது ஒன்றுதான் தமிழ்நாட்டில் நாம் பார்த்த அரசியலாக இருந்தது.

ஆனால் கடந்த நான்கு ஆண்டு காலமாக நாம் பார்த்த அரசியல் என்பது, இத்தகைய கட்சி அரசியலைதூர ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களுக்கான திட்டங்கள் மக்களுக்கான கொள்கைகள் மக்களுக்கான அறிவிப்புகள் மக்கள் கட்டமைப்புக்கான திறப்பு விழாக்கள் மக்களை அறிவுபடுத்தும் நூல்கள் வெளியீட்டு விழாக்கள் சாதனையாளர்களுக்கு பாராட்டு விழாக்கள் என்று, ஒரு மக்கள் அரசியலை கடந்த நான்கு ஆண்டு காலமாகத்தான் தமிழகத்தில் அரசியல் களத்தில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படி ஒரு அரசியல் களத்தை தலைகீழாக புரட்டிப் போட்ட ஒரு தலைவர் இருக்கிறார் என்று சொன்னால், நம்முடைய முத்துவேல் ஸ்டாலின் அவர்கள் ஒருவர்தான், தமிழகத்தின் அரசியல் களத்தை புரட்டிப் போட்டிருக்கிறார்.

### மக்கள் சக்தியில் முதல்வர்!

அவர் பயணம் செல்கிறார்; மக்களைச் சந்திக்கிறார்; வழிநெடுக மக்கள் திரண்டு நின்று, அவர்கள் காட்டுகிற அன்பையும், என்னுடைய குழந்தையை தூக்கிக் வையுங்கள் என்று குழந்தையை காட்டுவதையும், ஓடி வந்து கை குழுக்குவதையும், ஓடி வந்து செல்போனில் செல்ஃபி எடுத்துக் கொள்வதையும் நாம் பார்க்கிறபோது, மக்கள் ஆரவாரத்தில் மக்கள் சக்தியில் அவர் எவ்வளவு மூழ்கிப் போகிறார் என்பதை நாம் காண முடிகிறது.

எப்போது ஒரு தலைவர் மக்களை நேசிக்க ஆரம்பித்து விட்டாரோ, அப்போதே அவர் மக்கள் தலைவராக மாறிவிடுகிறார். மக்கள் தலைவராக ஒருவர் மாறுகிறபோது, அவர் கவலை எப்போதும் மக்களைப் பற்றிய கவலையாகவே இருந்து கொண்டுதான் இருக்கும். எனவே, அவர் மக்களைப் பற்றி சிந்திக்கிறார்; மக்களைப் பற்றி கவலைப்படுகிறார். அரசியலில் பல மாற்றங்கள் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பில் அவர் கொண்டு வந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஒரு நாட்டின் நிர்வாக கட்டமைப்பு என்பது, எப்படி செயல்படும் என்பது நமக்கு தெரியும். பொதுவாக ஒரு வருவாய்த்துறை அலுவலகத்திற்குச் சென்று ஒரு புகாரை கொடுக்கிறோம் என்று சொன்னால், அது வருவாய்த்துறை அலுவலகத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வேறு ஒரு துறைக்கு சென்று, அங்கிருந்து தலைமைச் செயலகத்திற்கு சென்று, ஒவ்வொரு துறையாக சென்று நின்று, அந்தக் கோப்புகள் அந்த கோரிக்கைகள் நிகழ்ந்து முடிவடைவதற்கு, எத்தனை ஆண்டுகாலம்? எத்தனை மாதம்? ஆகும் என்றே தெரியாது.

ஆனால், இந்த அரசு நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து மக்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு, அந்த நிர்வாகக் கட்டமைப்பை தூக்கி ஓரத்தில் வைத்துவிட்டு, மக்களோடு நேரடியாக தொடர்புகொண்டு மக்களின் கோரிக்கைகளை நேரடியாக பெற்றுக்கொண்டு, அதை தீர்ப்பதற்கு என்று ஒரு தனித்துறையை வைத்துக் கொண்டு, நீங்கள் என்ன பிரச்சினைகளை சொல்லுகிறீர்களோ, அதற்கு ஒரு காலத்தில் தீர்வு கிடைக்கும் என்ற இந்த அரசியல் நிர்வாக அமைப்பில் இருக்கும் அந்தநத்தை வேகத்தை முறியடிப்பதிலும் ஒரு சாதனையை நிகழ்த்திக் காட்டியவர் நம்முடைய தமிழக முதலமைச்சர்.

ஒன்றை நீங்கள் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் இப்போது எத்தனையோ திட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறது. பெண்களுக்கான திட்டம்: இலவசப் பேருந்து பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத்தொகை திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் நாட்டில் நடந்து கொண்டே இருக்கிறது. திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன; திட்டங்கள் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றன.

### முதல்வர் ஆட்சியின் குறைகளை சுட்டிக்காட்ட முடியுமா?

நான் கேட்கிறேன், இந்த நாட்டில் இத்தனை அரசியல் கட்சிகள் எல்லாம் இருக்கிறார்கள். அல்ப விஷயங்களுக்காக இந்த நாட்டில் போராட்டம் நடக்கிறது. அதாவது, எதிர்க்கட்சி எதற்கு போராட்டம் நடத்துகிறார்கள் என்று நீங்கள் பார்த்தாலே, இந்த ஆட்சி எவ்வளவு சிறந்த ஆட்சியாக இருக்கிறது என்பதற்கு அதுவே ஒரு உதாரணம்.

திராவிட மாடல் ஆட்சியின் கொள்கையை விமர்சித்தோ திராவிட மாடல் ஆட்சியின் அணுகுமுறையை விமர்சித்தோ,இந்த நாட்டில் எவனும் போராட்டம் நடத்துவதேகிடையாது. ஏதோ ஒரு மூலையில் ஏதோ ஒரு சின்ன சம்பவம் நடந்தது என்றால், அதை தூக்கி வைத்துக் கொண்டு வந்து, தமிழ்நாட்டு மக்களை மாற்றுவதற்கு அவர்கள் முயற்சி செய்து பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட போராட்டம்தான் நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால், திராவிட மாடல் ஆட்சியில் தமிழக முதல்வர் அறிவித்த அத்தனை திட்டங்களையும் பற்றி, இந்தத் திட்டங்கள் தோற்றுவிட்டது; மகளிர் உரிமைத் தொகை யாருக்கும் சென்று சேரவில்லை; விடியல் பயணத்திட்டத்தில் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்; அவர்களுக்கு கொடுக்கப்படும் பென்ஷன் தொகை வந்து சேரவில்லை என்று தமிழக முதலமைச்சர் அறிவித்த திட்டங்களில், ஏதேனும் ஒரு குறையை எந்த ஒரு அரசியல் கட்சிக்காரரும் இதுவரை சுட்டிக்காட்டி இருக்கிறார்களா? ஒரு விஷயத்தை உங்களால் சொல்ல முடியுமா?

இப்போது அனைத்தும் ஆன்லைனில் மாறி விட்டது. 8ஆம் தேதி ஆனவுடன் சரியாக பணம் வந்து விடுகிறது. மகளிர் உரிமைத் தொகையாக இருந்தாலும் சரி புதுமைப்பெண் தொகையாக இருந்தாலும் சரி பென்ஷன் தொகையாக இருந்தாலும் சரி, அத்தனையும் அந்த தேதியில் சரியாக வந்து கொண்டே இருக்கிறது.

நீங்கள் இன்னொன்றையும் பார்க்க வேண்டும். காலை உணவுத் திட்டம் அது மிகவும் ரிஸ்க்கான திட்டம். எத்தனை லட்சம் மாணவர்களுக்கு? எத்தனை ஆயிரம் பள்ளிகளுக்கு? அந்தக் காலை உணவு வழங்கப்படுகிறது என்று சொன்னால், அந்தக் காலை உணவு திட்டத்தில் ஏதோ ஒரு இடத்தில் சாப்பாடு இல்லை; ஒரு பல்லி விழுந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பல்லி அந்தச் சாப்பாட்டில் விழுந்தது என்று சொன்னால், அடுத்த நாளே தமிழ்நாட்டை போர்க்களமாக மாற்றுவதற்கு - கொடி பிடிப்பதற்கு இங்கு தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இத்தனை மாசமாக அந்தத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. பல்லாயிரம் பேர் அதில் பயன்பட்டிருக்கிறார்கள். முதலில் அரசுப் பள்ளிகளுக்கு அறிவித்தார்; பின்னர் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அறிவித்தார். அந்தத் திட்டம் எவ்வாறு சிஸ்டமடிக்காக ஒழுங்காக ஒரு பள்ளியில்கூட குறை இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது என்பதை விட, ஒரு மகத்தான சாதனை நிர்வாக திட்டம் வேறு எங்காவது இருக்கிறதா? நீங்கள் சொல்ல முடியுமா? இந்த ஆட்சியைப் பற்றி,அப்படி ஒரு குற்றச்சாட்டு வந்திருக்கிறதா?

அது எப்படி முடிகிறது? கேள்விப்பட்டபோது வியப்பாக இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் காலை உணவு திட்டத்தில் சமைப்பவர்கள் காலையில் 7.30மணிக்கு வந்தவுடன், நான் வந்துவிட்டேன் என்று தலைமைக்கு சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு, இன்னொரு விதிமுறை என்ன போட்டிருக்கிறார்கள் என்றால், அவ்வாறு சமைப்பவரின் குழந்தை அந்தப் பள்ளியில் படிப்பவராக இருக்க வேண்டும். எப்போது சமையலை ஆரம்பிக்கப்போகிறேன்? அரை மணி நேரத்தில் சமையலை முடித்தாக வேண்டும்; பள்ளி வகுப்புகள் தொடங்கியாக வேண்டும்; சமையலை ஆரம்பித்தது சமையலை செய்து முடித்தது அதற்குப் பிறகு, மாணவர்கள் சாப்பிடுவது அத்தனையும் ஒவ்வொரு பள்ளியில் நடப்பதையும் புகைப்படமாக எடுத்து, ஆன்லைனில் தலைமைக்கழகத்திற்கு அனுப்பப்படுகிறது. அத்தனையும் கண்காணிக்கப்பட்டு, ஒரு இடத்தில் கூட எந்த தவறும் நடக்கக்கூடாது என்று சொல்லும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை இந்த நாட்டில் தமிழக முதலமைச்சர் தன் கீழ் கண்காணித்துக் கொண்டு வருகிறார் என்பது எவ்வளவு பெரிய சிறப்பு என்பதை நாம் பார்க்க வேண்டும்.

முதலமைச்சர் இன்றைக்கு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே பல பங்களிப்புகளை வழங்கி இருக்கிறார். இதெல்லாம் எதிர்காலத்தில் வரலாற்றில் எழுதப்பட வேண்டிய விஷயமாக நாம் பார்க்க வேண்டும். என்ன பங்களிப்பு வழங்கி இருக்கிறார்? 2,3 விஷயங்களை மட்டும் நான் சொல்கிறேன்.

### முதல்வரின் சாதனை!

சமூக நீதித்துறையில் ஒரு விஷயத்தை சொல்கிறேன். மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு அகில இந்திய கோட்டாவில் இட ஒதுக்கீடு 27 சதவிகிதம் கொடுக்க மாட்டேன் என்று அடம் பிடித்தார்கள். அதாவது, நம்மிடம் இருக்கும் மருத்துவ சீட்டில் 15 சீட்டை அவர்கள் எடுத்துவிடுவார்கள். உயர்கல்வியில் 50 சதவிகித்தை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். இந்த மருத்துவ இட ஒதுக்கீடு தர மாட்டோம் என்று அடம் பிடித்தார்கள்.



முதலில் தி.மு.க. உறுப்பினர்களை வைத்து நாடாளுமன்றத்தில் பேச வைத்தார். அதற்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றத்திற்கு செல்லுங்கள் என்று சொன்னது. உயர்நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த பிறகுதான், நாங்கள் அந்த இட ஒதுக்கீட கொடுக்கிறோம் என்று ஒன்றிய அரசு சொன்னது. அவ்வாறு சொல்ல வைத்தது தமிழக முதலமைச்சர்.

அதற்குப் பிறகு, உயர்நீதிமன்றம் ஒரு குழுவை அமைத்து ஆராய வேண்டும் என்று சொன்னது. அந்தக் குழுவை அமைக்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தியது. அதற்கு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றை தமிழகமுதலமைச்சரின் உத்தரவின் பெயரில் போடப்பட்டது. அது உச்சநீதிமன்றத்திற்கு சென்றது. இவ்வாறெல்லாம் பல தடைகளை கடந்துதான், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அகில இந்திய கோட்டாவில் 27 சதவிகிதஇட ஒதுக்கீட்டை உறுதி செய்து, அது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அந்த வாய்ப்புகள் கிடைப்பதற்கான கதவை திறந்து விட்டவர் தமிழகம் முதலமைச்சர். இது ஒரு சாதனை.

அதேபோன்று, உயர்கல்வியில் 50 சதவிகித இடத்தை கொடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள். அதை போராடி வாங்கிக் கொடுத்த பெருமை தமிழக முதலமைச்சருக்கு உண்டு.

அது எல்லாவற்றையும் விட, இப்போது நடத்தியிருக்கும் ஒரு போராட்டம், இந்தப் போராட்டத்தில் உச்சநீதிமன்றத்தின் வழியாக அவர் பெற்றுத் தந்திருக்கும் ஒரு உரிமை, இதைப்பற்றி இன்றைக்கு இந்தியா முழுவதும் பேசப்படுகிறது. அனைத்து ஏடுகளும் இதைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன. ஆங்கில ஏடுகள் அத்தனையும் பாராட்டை எழுதிக் கொண்டிருக்கின்றன.

### 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள்!

அதாவது, ‘வீட்டோ’ என்னுடைய பாக்கெட்டில்தான் இருக்கிறது.‘பாக்கெட் வீட்டோ’ என்ற வார்த்தையை உச்சநீதிமன்றம் பயன்படுத்தி இருக்கிறது. என் பையில்தான் அது இருக்கிறது. நான் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி செய்கின்ற திட்டங்களை - மசோதாக்களை, நான் நினைத்தால் உனக்கு ஒப்புதல் தருவேன்; நான் நினைக்காவிட்டால் தூக்கி கிடப்பில் போடுவேன் என்று, தமிழ்நாட்டில் ஒரு ஐ.பி.எஸ். வந்தார். பி.ஜே.பி.யில் இருந்து ஒரு ஐ.பி.எஸ்.காரர் வந்தார். ஆளுநர் மாளிகையில் இருந்து ஒரு ஐ.பி.எஸ்.காரர் வந்தார். இந்த 2 ஐ.பி.எஸ்.காரர்களும் தாங்கள் போலீஸ்காரர்கள் என்று நினைத்துக் கொண்டு, மக்களுடைய பிரதிநிதிகளைப் பற்றி கவலைப்படாமல், கொடுரமாக தங்கள் அதிகாரத்தையும், மக்களையும் பேசிக் கொண்டே மோசமாக இருந்தார்கள். தொடர்ச்சியாக இந்த ஆளுநரை எதிர்த்து ஒரு மிகப்பெரிய போராட்டம் இந்த நாட்டில் நடத்தப்பட்டது.

நீங்கள் ஒன்றை கவனிக்க வேண்டும். தொடர்ச்சியாக ஆளுநர் தமிழ்நாடு அரசுக்கு முட்டுக்கட்டை போட்டார். மசோதாக்கள் அனைத்தையும் கிடப்பில் போட்டார். தமிழ்நாட்டு மக்களை திருத்துவதற்கு, ஏதோ அவதாரம் எடுத்து வந்து, தமிழ்நாட்டில் நமக்கெல்லாம் பெரியார் இல்லை அண்ணா இல்லை கலைஞர் இல்லை தமிழக முதலமைச்சர் இல்லை,நான்தான் உங்களுக்கு அறிவுரை சொல்லி இந்த நாட்டை மாற்றப் போகிறேன் என்று, சனாதனபெருமை பேசுவது சமஸ்கிருதத்தை பேசுவது திராவிடம் என்பது பொய் என்று சொல்வது ரிஷிகளும், மகாக்களும்தான் நம்முடைய நாட்டை வடிவமைத்தார்கள்என்று சொல்வது தமிழ்நாட்டில் தீண்டாமை, சாதி கொடுமை அதிகமாகிவிட்டது என்று சொல்வது -ஏதோ தமிழ்நாட்டை திருத்த வந்த ஒரு மகானாக கருதிக் கொண்டு அவர் பேசிய பேச்சிருக்கிறதேஅந்த அலம்பல்.மிகக் கொடுமையான அலம்பல். தமிழ்நாட்டு மக்கள், அவரை சீண்டவும் இல்லை; திருந்தவும் இல்லை.

அதே போன்று, சட்டமன்றத்தில் 2 முறை அவர் சட்ட மீறலை செய்து காட்டினார்; மரபை மீறினார். தமிழக அரசு கொடுத்த பேச்சை, நான் பேச மாட்டேன் என்று சொன்னார். ஒருமுறை அல்ல,2 முறை சொன்னார். அதிலும், பெரியார் அண்ணா இவர்களுடைய பெயர் வருகிறபோது, நான் அதை படிக்க மாட்டேன் என்று சொன்னார். அவர் எழுதி வந்த கருத்துகளை திணித்துப் படித்தார். இவை அனைத்தும் மரபு மீறிய செயல்கள்.

ஆனால், அந்த ஆளுநருக்கே சட்டமன்றத்தில் முதலமைச்சர் எழுந்து, ஆளுநருடைய அந்த வரம்பு மீறிய உரையை சட்டசபைக் குறிப்பில் இருந்து நீக்குங்கள் என்று சொல்லி, ஆளுநர் உரையை சட்டசபைக் குறிப்பில் இருந்து நீக்க வைத்தவர் தமிழக முதலமைச்சர். எனவே ஆளுநருக்கு அப்படியொரு கச்சேரியை தமிழ்நாட்டில் நாம் நடத்தி காண்பித்தோம்.

ஆனால், இவ்வளவு கச்சேரிகளை நடத்தியதற்கு பிறகும் கூட நீங்கள் ஒன்றைப் பார்க்க வேண்டும். ஆளுநருக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை, தமிழக அரசோ தமிழக முதல்வரோ கொடுக்க மறுத்தார்களா? எவ்வளவு நாகரிகம், பண்பாட்டோடு அவரைக் கேட்டது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அவர் உரையாற்ற வருகிறார் என்று சொன்னால், முறைப்படி ஆளுநர் மாளிகைக்கு சென்று, உரையாற்ற வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் என்ன உரை ஆற்றப் போகிறார் என்று, தயாரித்த உரை அவருக்கு வழங்கப்பட்டது. அவருடைய ஒப்புதல் வழங்கப்பட்டது. சட்டசபைக்கு அவர் உரையாற்ற வருகிறபோது, அவருக்கு தரப்பட வேண்டிய முறையான வரவேற்பு வழங்கப்பட்டது. முறையாக நாற்காலி கொண்டு வைக்கப்பட்டது.

ஆனால் இவ்வளவு பண்பாடுகளை நாம் செய்தாலும், பண்பாடற்ற கீழ்த்தரமான செயல்களில் அந்த ஆளுநர் ஈடுபட்டதை பார்க்கிறபோது, தமிழக அரசின் ஏன் இவ்வளவு பண்பாடாக இருக்கிறது? அவருடைய பண்பாடு எப்படி இருக்கிறது? என்பதை மக்கள்...... உணர்ந்து கொண்டார்கள். இவ்வாறு ஏராளமாக நாம் சொல்ல முடியும்.

### அண்ணா நூலகத்தை சீரழித்த அ.தி.மு.க. ஆட்சி!

அ.தி.மு.க. ஆட்சி நடக்கிறபோது, கலைஞர் ஆட்சி கொண்டு வந்த பல்வேறு திட்டங்களை, வேண்டுமென்றே கலைஞர் கொண்டு வந்தார் என்பதற்காக, அதை நிறுத்திக் காட்டினார்கள். கடந்த காலங்களில் இதை நாம் பார்த்தோம். கலைஞர் கொண்டு வந்த சமச்சீர் கல்வி திட்டத்தை, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு செல்லாது என்று சொன்னார். பிறகு நீதிமன்றம் அதில் தலையிட்டு, மீண்டும் கொண்டு வந்தது. கலைஞர் கொண்டு வந்த உழவர் சந்தை திட்டத்தை, அந்த அம்மா கிடப்பில் போட்டார்கள். அதேபோன்று கலைஞர் தலைமைச் செயலகத்திற்காக கட்டிய கட்டிடத்தை, ஓமந்தூரார் மருத்துவமனையாக மாற்றி அறிவித்தார்கள். அதே போன்று, அண்ணா நூலகத்தையும் கெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் நடந்தது. நல்ல வேலை நீதிமன்றம் தலையிட்டு, அந்த அண்ணா நூலகத்தை காப்பாற்றி வைத்திருக்கிறது. எனவே, பழிவாங்கும் அரசியலை மட்டும்தான் அவர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், தமிழக முதலமைச்சர் அதிகாரத்திற்கு வந்ததற்குப்பிறகு, இந்த பழிவாங்கும் அரசியலைப் பற்றி அவர் நினைத்துப் பார்க்கவே இல்லை. அதை அவர் கையில் எடுக்கவே இல்லை. இவர்களைப் பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. பல அமைச்சர்கள் மீது ஊழல் வழக்குகள் போட்டு, ஊழல் விசாரணைகள் நடத்தப்பட்டு, அதற்கான காரணங்கள் இருந்தும் ஜெயலலிதா ஆட்சி என்றால், ஊழல் வழக்கு போட்டு விசாரணை நடந்தவுடனேயே சிறையில் அடைத்து விடுவார்கள். ஆனால், அவ்வாறு சிறையில் போட்டிருக்க முடியும். அந்த காரியங்களையும் அவர் செய்யாமல், அவர்களுக்குரிய பண்பை மரியாதையை தமிழக முதலமைச்சர் அவர்கள் காப்பாற்றினார்கள்.

### ‘நீட்’டை எதிர்த்து சட்டப் போராட்டம்!

இன்னும் சொல்லப்போனால், நீட் பாதிப்பை எதிர்த்து தொடர்ச்சியான சட்டப் போராட்டத்தை தமிழக முதலமைச்சர் அவர்கள் நடத்திக் கொண்டே இருக்கிறார்கள். ஏற்கனவே இதற்கு முன்பு ஆளுநராக இருந்தவர், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தன்னுடைய அதிகாரத்தை அத்துமீறி செயல்பட்ட காலத்தில், எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், மாநில உரிமைக்காக அந்த ஆளுநரை எதிர்த்து போராட்டம் நடத்தியது என்பதை நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் ஆளுநர் இவ்வாறு அவமதிக்கிறார். நம்முடைய முதலமைச்சர் மாநில சுயாட்சியை பற்றிய தீர்மானத்தை 110 விதியின் கீழ் அறிவிக்கிறபோது,அதை மதிக்காமல் எடப்பாடி பழனிசாமி வெளியே செல்கிறார். அவர் முதலமைச்சராக இருக்கிறபோது, மாநில உரிமைக்காக அந்த ஆளுநரை எதிர்த்து தி.மு.க. ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதில்தான் தி.மு.க.வின் பண்பை நீங்கள் பார்க்க வேண்டும்.

அதேபோன்று,7.5 சதவிகித இட ஒதுக்கீடு எடப்பாடி கொண்டு வந்தார். எடப்பாடி கொண்டு வந்தாலும், ஆளுநர் கையெழுத்திட மறுத்தார். ஆளுநரே கையெழுத்திடு என்று எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க., ஆளுநரை எதிர்த்து அன்றைக்கு போராட்டம் நடத்தியது. ஏனென்றால், கொள்கை வழியில் நடக்கும் ஒரு அமைப்பு - ஒரு இயக்கம் கொள்கைக்காக நிற்கிறதே தவிர, கட்சி பாகுபாடுகளை அது பார்க்காது என்று செயல்களத்தில் நிரூபித்திருக்கிறார் நம்முடைய தமிழக முதலமைச்சர். அதைத்தான் நாம் அதில் பார்க்க வேண்டும்.

### ஜெயலலிதாவின் பழிவாங்கும் அரசியல்!

அதேபோன்று, அவர்கள் கொண்டு வந்த அனைத்து திட்டங்களையும் முடக்கிவிட்டாரா? எந்தத் திட்டத்தையும் முடக்கவில்லை. 7.5 சதவிகிதஇட ஒதுக்கீட்டை மருத்துவக் கல்லூரிகளுக்கு மட்டும்தான் எடப்பாடி கொண்டு வந்தார். அந்த 7.5 சதவிகிதம் என்று சொன்னால், நீட்இல் தேர்ச்சி பெற்றதற்கு பிறகும் கூட அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் மருத்துவ படிப்பில் சேர முடியவில்லை. ஏன் என்றால், தனியார் படியில் படித்தவர்கள் மிகவும் முன்னேறிய சமூகத்தில் இருந்து வந்தவர்களுடன்,அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றாலும், இடம் கிடைக்காமல் தவித்தார்கள்.

அதனால், அரசுப் பள்ளியில் படிக்கும் 7.5 சதவிகிதம் பேருக்குகட்டாயமாக இடம் கொடுக்க வேண்டும் என்று பாதுகாப்பதற்காக கொண்டு வரப்பட்ட ஒரு இட ஒதுக்கீடுக்கான திட்டம்தான் அது. இதே ஜெயலலிதா அம்மாவாக இருந்திருந்தால் என்ன செய்வார்கள் என்றால், தி.மு.க. தலைவர் கலைஞர் கொண்டு வந்தால், உடனே அந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை நீக்க வேண்டும் என்றுதான் அந்த அம்மா சொல்லி இருப்பார். அது அவர்களுடைய பழிவாங்கும் அரசியல்.

ஆனால், நம்முடைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ன செய்தார் என்றால், அந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை மருத்துவத்திற்கு மட்டும் அவர் கொண்ட வந்தார்; நான் அதை பொறியியலுக்கும் விரிவுபடுத்துகிறேன்; விவசாய கல்லூரிகளுக்கும் விரிவு படுத்துகிறேன்; சட்டக் கல்லூரிகளுக்கும் விரிவு படுத்துகிறேன்; கால்நடை கல்லூரிகளுக்கு விரிவுபடுத்துகிறேன் என்று அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினார். அவருக்கு திட்டம்தான் முக்கியம்; கொள்கைதான் முக்கியம்; பழிவாங்கும் அரசியல் என்பது வேண்டாம் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

இப்போது ஒரு பெரிய கூச்சல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, பதவிக்கு வந்தவுடன் நான் ஒரே கையெழுத்தில் நீட்டை ஒழிப்பேன் என்று சொன்னீர்களே... நீட்டை ஒழித்து விட்டீர்களா? இதுதான் அனைவரும் பேசும் கேள்வி. ஏதோ தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் மிகவும் மடையர்களாக நினைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கும்போது என்ன சொன்னார்கள் என்றால், நீட்ஐ எவ்வாறு நீக்க வேண்டும் என்ற ரகசியம் எங்களுக்கு தெரியும் என்று ஒரு வார்த்தை சொன்னார்கள். நீங்கள்தான் ரகசியம் தெரியும் என்று சொன்னீர்களே... இப்போது அந்த ரகசியம் எங்கே சென்றது? என்று அவர்கள் கேட்கிறார்கள்.

அது என்ன ரகசியம் தெரியுமா? நீட்ஐ ஒழிப்பதற்கு எங்களுக்கு ரகசியம் தெரியும் என்று, கலைஞர் அவர்கள்செய்த ரகசியத்தைதான் தமிழக முதல்வரும் செய்ய நினைத்தார். அது என்ன ரகசியம் என்று சொன்னால், இட ஒதுக்கீட்டில் ஒரு திட்டத்தை கொள்கையை வகுக்கிறபோது, அந்தக் கொள்கையை அரசு அறிவித்தால் மட்டும் போதாது. அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு வருகிறபோது, நாங்கள் ஏன் இந்தத் திட்டத்தை அறிவிக்கிறோம் என்பதற்கு, தரவுகள் வேண்டும்; சான்றுகள் வேண்டும்; அதைப் பற்றிய கள ஆய்வுகள் வேண்டும். இத்தனையும் இருந்தால்தான் நீதிமன்றம் அதை ஏற்க முடியும்.

### அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடு!

நீட்-டிற்கு நாங்கள் விலக்கு கேட்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. நாம் ஏன் நீட்-டிற்கு விலக்கு கேட்கிறோம் என்பதற்காக ஒரு ஆய்வுக் குழுவை அமைத்து, அந்த ஆய்வுக் குழு அதை பரிசீலனை செய்து, அதனுடைய அறிக்கையை பெற்று, அந்த அறிக்கையை சட்டமன்றத்தில் வைத்து, அதற்கு ஒப்புதல் வாங்கி, நாங்கள் நீட் விலக்குகோருவ தற்கான காரணங்களை, அறிவியல் ரீதியாக ஆதாரப்பூர்வப்பாக நிரூபித்து சட்டமன்ற ஒப்புதலோடு வருகிறோம் என்று நீதிமன்றத்தில் சொல்லுகின்றபோது, நீதிமன்றம் அதை இல்லை என்று சொல்வதற்கான வாய்ப்பு இருக்காது. இதுதான் அதில் இருக்கும் ரகசியம்.

இந்த ரகசியம் எப்படி நமக்கு தெரிந்தது? கலைஞர் அந்த ரகசியத்திற்கு நமக்கு வழிகாட்டி இருக்கிறார். என்ன வழிகாட்டி இருக்கிறார்? தலித் மக்களுக்கு பட்டியலின மக்களுக்கு அருந்ததியினருக்கு உள் இட ஒதுக்கீடு கொண்டு வந்தார். இஸ்லாமியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு கொண்டு வந்தார்.

அதே நேரத்தில், ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு அவர்கள், தலித் மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு கொண்டு வந்தார். ஆனால் அவர் எந்த ஆய்வு செய்யவில்லை. தலித் மக்களை 4 பிரிவுகளாக பிரித்த, அவர் கொண்டு வந்த அந்த இட ஒதுக்கீடு உச்சநீதிமன்றம் ரத்து செய்துவிட்டது. ஆனால், கலைஞர் அந்த உள் இட ஒதுக்கீட்டை எப்படி கொண்டு வந்தார் என்று சொன்னால், இதற்காக ஒரு தனி ஆணையம் அமைத்து, அந்த ஆணையத்தின் பரிந்துரைகளைப் பெற்று, இவர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு வழங்குவதற்கு நியாயம் இருக்கிறது என்பதை ஆதாரத்தோடு நீதிமன்றத்தில் வைத்த காரணத்தினால்,நாம் இந்த இட ஒதுக்கீடுகளை காப்பாற்றி இருக்கிறோம். இந்த ரகசியம்தான் திராவிட இயக்கத்திற்கு தெரிந்த ரகசியம். இந்த திராவிட இயக்கம்தான், சமூக நீதியில்......மேற்கொள்ளும் ரகசியம். இதை அவர்கள் செய்யவில்லை.

ஆனால், அதனால்தான் முதலமைச்சர் வந்தவுடன் ஏ.கே.ராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். அந்த குழு பரிசீலித்தது. அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் நீட்டினால் எப்படி பாதிக்கப்படுகிறார்கள்? என்பதை தரவுகள் ஆய்வுகள் புள்ளி விவரங்களுடன், ஒரு பெரிய அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை சட்டமன்றம் நிறைவேற்றியது. அதை நாம் ஆளுநருக்கு அனுப்பினோம். ஆளுநர் அதை அனுப்பி இருந்தார் என்று சொன்னால், அதிலிருந்து நாம் விலக்கு பெற்று, தமிழ்நாடு இன்றைக்கு நீட் இல்லாத ஒரு மாநிலமாக நிச்சயமாக மாறியிருக்க முடியும். அதற்குப் பிறகு அதை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றால் கூட, இதற்கான தரவுகள் விளக்கங்களைப் பார்த்து நீதிமன்றம் அதை தள்ளுபடி செய்திருக்கவும் முடியாது.

### ஆளுநரின் அடாவடி அரசியல்!

ஆனால், ஆளுநர் அதை தன்னுடைய கிடப்பிலேயே வீட்டோ பவரினால் போட்டு வைத்தார்... என்று சொல்லி. இப்போது நீதிமன்றம் சரியான சவுக்கடி தந்திருக்கிறது. “தம்பி, உனக்கு அந்த அதிகாரம் கிடையாது. ஒரு முறை அவர்கள் போட்டு அனுப்பினார்கள் என்றால், நீ அதை திருப்பி அனுப்பி, அவர்கள் மீண்டும் சட்டமன்றத்தில் அதை நிறைவேற்றினார்கள் என்றால், அதற்கு உடனே நீ ஒப்புதல் தந்தாக வேண்டும். இதுதான் சட்டம்.” என்பதை தெளிவாக உச்சநீதிமன்றம் மண்டையில் அடித்து கொடுத்திருக்கிறது.

இதை எவ்வாறு நீதிமன்றத்தில் நம்முடைய அரசு அணுகியது என்பதைப் பார்க்க வேண்டும்.10 மசோதாவையும் ஒட்டுமொத்தமாக திருப்பி அனுப்புகிறபோது, இந்த 10 மசோதாவிலும் ஏதேனும் திருத்தங்கள் செய்யப்பட்டு மீண்டும் ஆளுநருக்கு அனுப்பப்பட்டால், அதை இரண்டாவது முறை ஆளுநர் நிராகரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினால், எந்தத் திருத்தமும் செய்யாமல் இந்த 10 மசோதாவையும் ஒரே ...... கீழ் அங்கீகாரம் பெற்று, ஒட்டுமொத்தமாக அதை ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைத்தார்கள். அதை குடியரசுத் தலைவருக்கு அவரே அனுப்பி வைத்துவிட்டார். எனவே, அது ஒன்று செய்யப்பட்டது.

இந்த ஆளுநரின் அடாவடியை எதிர்த்து ஒன்றிய அரசு அட்வகேட் ஜெனரலை வைத்து உச்சநீதிமன்றத்தில் வாதாடியது. சட்டசபையில் மக்களுடைய உரிமையை மறுக்கின்ற ஒருவருக்காக, இந்திய அரசின் பணத்தை செலவு செய்து, அட்வகேட் ஜெனரலை வைத்து நீங்கள் வாதாடுகிறீர்கள். அவர் ஒரு வாதம், எப்படி வாதடினார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிமன்றம், ‘இரண்டாவது முறை அனுப்பும்போது நீங்கள் மசோதாவிற்கு கையெழுத்து தானே போட வேண்டும். ஏன் நீங்கள் கையெழுத்து போடவில்லை’ என்று கேட்கும்போது, அட்வகேட் ஜெனரல் என்ன சொன்னார் தெரியுமா,‘நாங்கள் இரண்டாவது முறை அனுப்பியது ஒரிஜினல் மசோதா அல்ல. ஒரிஜினலை நான் கையில் வைத்துக் கொண்டு, ஜெராக்ஸ்ஐ தான் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதனால் ஜெராக்ஸ்ஐ திருப்பி அனுப்புயதில், நான் கையெழுத்திட முடியாது’ என்று சொன்னார். நீதிபதிகள் அனைவரும் வாய்விட்டு சிரித்தார்கள். இப்படி ஒரு காமெடியான வாதத்தை, எவனாவது ஒரு அட்டர்னி ஜெனரல் வந்து பேசுவானா என்ற அளவுக்கு, அவர்களுடைய விஷயங்கள் இருந்தது.

அதேபோன்று, 7.5 சதவிகிதஇட ஒதுக்கீட்டை, பொறியியல் கல்லூரிகளுக்கும் மற்ற கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்துகிறபோது கூட, முதலமைச்சர் ஜாக்கிரதையாக நீதிபதி குமரசன் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுதான் இந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை மருத்துவ கல்லூரி தவிர, பொறியியல் கல்லூரி, விவசாய கல்லூரி, சட்டக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கு இன்றைக்கு பாதுகாப்பாக இருக்கிறது. எந்தப் பிரச்சினையும் இல்லை.

இப்போது என்ன பேசுகிறார்கள் என்றால், நீதிமன்றத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவு போடுவதா? என்று இன்றைக்கு துணை ஜனாதிபதி பேசியிருக்கிறார். அவர் நீதிமன்ற அவமதிப்பாக பேசுகிறார். ஏன் அவர் பேசுகிறார் என்று சொன்னால், அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு போட முடியாது. அதனால் துணை ஜனாதிபதி என்கிற அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டு அவர் செய்கிறார்.

ஆனால், இந்த வாதத்தில் என்ன தவறு இருக்கிறது என்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது உச்சநீதிமன்றம் என்ன சொன்னது. சட்டமன்றம் எடுத்த ஒரு முடிவை ரத்து செய்வதற்கு கவர்னருக்கு அதிகாரம் இல்லை. எனவே மக்கள் மன்றம் எடுத்த முடிவுக்குதான், இன்றைக்கு நீதிமன்றம் ஒப்புதல் வழங்கியிருக்கிறது. மக்கள் மன்றம் எடுத்த முடிவுதான் சரி என்பதற்குதான் ஒப்புதல் வழங்கியிருக்கிறது. எவ்வாறு நாடாளுமன்றம் பெரிது என்று நீ கருதுகிறாயோ, அதேபோல் மக்கள் மன்றமும் சட்டமன்றமும்தான் பெரிது என்பதுதான் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

எனவே, நீங்கள் சொல்லும் மக்கள் மன்றம் பெரிது எனும் தீர்ப்பைதான் உச்சநீதிமன்றம் வழியாக வந்திருக்கிறது. மக்கள் மன்றத்தைநீங்கள் மதிக்கவில்லை. அதனால் உங்கள் தலையில் கொட்டிக் காட்டியிருக்கிறது. அதுதான் இதில் இருக்கும் உண்மை.

அடுத்த கேள்வி என்ன கேட்கிறார்கள் என்றால், இதில் அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும். சட்டத்தை திருத்தாமல் எப்படி செல்லுபடியாகும் என்று கேட்கிறார்கள். இப்போது நீதிமன்றம் வழங்கி இருக்கும் தீர்ப்பு, சட்டத்தை மாற்றி அமைப்பதற்கான தீர்ப்பு அல்ல;சட்டத்திற்கு சரியான விளக்கங்களை கொடுத்திருக்கும் தீர்ப்புதான். ஏற்கனவே இருக்கும் 200வது பிரிவு, ‘As long as possible’.

நீங்கள் ஒரு நண்பரிடம் சென்று கடன் வாங்குகிறீர்கள். எப்போது கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டால், எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடு, சந்தோஷப்படுவேன் என்று சொல்லலாம். சரி என்று கடனை வாங்கிக் கொண்டு பணத்தை கொடுக்காமல் 10 வருடம் கிடப்பில் போட்டோம். இன்னும் படம் கொடுக்கவில்லையே, என்ன ஆனது? என்று கேட்டால், நீதான் எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடு சொன்னால் அல்லவா, அதை நான் எவ்வாறு புரிந்து கொண்டேன் என்றால், நீ எவ்வளவு காலம் கழித்து கொடுத்தாலும் கொடு, இல்லையென்றால் கொடுக்காமல் இரு என்று நான் புரிந்து கொண்டேன். அதனால்தான் நான் வைத்துக் கொண்டேன் என்று ஒருவன் பதில் சொன்னால் என்றால், அது எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கிறதோ அதே பதிலைத்தான் இன்றைக்கு ஆளுநர் தரப்பில் சொல்லப்பட்டது.

அவர் சொல்லி இருக்கிறார், சட்டத்தில் ‘As long as possible’ என்று இருக்கிறது. எவ்வளவு சீக்கிரமாக இதற்கு ஒப்புதல் கொடுக்க முடியுமோ ஒப்புதல் கொடு. நீங்கள் சீக்கிரம் கொடுக்காமல், 4,5 வருடம் கிடப்பில் போட்டு வைத்துவிட்டீர்கள் என்று சொன்னால்,எனவே உங்களைப் போன்று ஆட்களுக்கு எல்லாம் எவ்வளவு சீக்கிரம் என்பதற்கு நான் ஒரு கணக்கு சொன்னால்தான் காதை பிடித்து திருவினால்தான் நீங்கள் கேட்பீர்கள்.

எவ்வளவு சீக்கிரம் என்று அதில் சொல்லி இருக்கிறது அல்லவா... அந்த சீக்கிரம் என்பதற்கு ஒரு மாதம் காலம். குடியரசுத் தலைவருக்கு, எவ்வளவு சீக்கிரம் என்று சொல்லி இருக்கிறது அல்லவா... அவருக்கு 3 மாதம் காலம். எனவே, ஏற்கனவே இருக்கும் சட்டத்தின் நோக்கத்தை விளக்கி இருக்கிறதே தவிர, புதிய அரசியல் சட்டத்தில் எந்த மாற்றமும் அவர்கள் கொண்டு வரவில்லை.

### ஆளுநர் ஒரு அலங்காரப் பொம்மை!

இப்போது இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு, தமிழ்நாட்டிற்கு இப்படி ஒரு சட்டம் வந்துவிட்டது என்று உடனே கேரளாகாரர்கள்எங்கள் கவர்னர் வைத்திருக்கும் மசோதாவை எல்லாம் டிஸ்போஸ் செய்யுங்கள் என்று கேரளா அரசு இன்றைக்கு கிளம்பி நீதிமன்றத்தில் வழக்கு போட இருக்கிறார்கள். ஏற்கனவே இதை பஞ்சாப் மாநில அரசு, அந்த கவர்னர்...... எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் வெற்றி பெற்று, அதன் தொடர்ச்சியாக இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது.

இந்தத் தீர்ப்பை வைத்து ஒவ்வொருவரும் என்ன செய்யப் போகிறார்கள்?எந்தெந்த ஆளுநர் எங்கெங்கு மறுக்கிறார்களோ, அங்கங்கு ஆளுநரை எதிர்த்து இந்தத் தீர்ப்பை வைத்து வழக்கு தொடுத்து,ஆளுநர் என்பவர் ஒரு அலங்கார பொம்மைதான். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சட்ட மன்றத்தை கட்டுப்படுத்த முடியாது என்ற அரசியல் ரீதியான ஒரு சட்டத்தை உருவாக்கி, அதை தெளிவுபடுத்தி, அதனுடைய குழப்பத்தை வெளிச்சப்படுத்தி, அது குடியரசுத் தலைவராக இருந்தாலும் அவருக்கும் பொருந்தும் என்பதை தெளிவுப்படுத்துகின்ற ஒரு தீர்ப்பை வழங்கி, அதை அனைத்து மாநிலங்களுக்கும் இன்றைக்கு அனுப்பி வைத்து, மாநிலங்களின் உரிமைகளை மீட்டு தந்திருக்கும் ஒரு வரலாற்றுப் பெருமையை செய்து முடித்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, இப்படிப்பட்ட சாதனைகள்.

அனைத்திற்கும் மேலாக, கலைஞர் சொன்ன அந்த மாநில சுயாட்சிக்காக ஒரு குழுவை அவர் அமைத்திருக்கிறார். எந்தெந்த வகையில் ஒன்றிய ஆட்சி அத்துமீறலை செய்திருக்கிறது என்பதை எல்லாம் கண்டறிந்து, அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை தர இருக்கிறது.

இந்தக் குழு தன்னுடைய அறிக்கையை தந்தவுடன், அடுத்து வரும் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி, இந்த குழு தரும் அறிக்கையை வைத்து, மீண்டும் ஒன்றிய அதிகாரத்திற்கு-ஏகாதிபத்தியத்திற்கு பார்ப்பனியத்திற்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து நடத்தி, அடுத்து வரும் ஆட்சி மாநில சுயாட்சியின் கீழ் நின்று, மாநில சுயாட்சியின் முதலமைச்சர் இங்கே இருக்கிறார் என்பதை இந்த நாட்டிற்கு உணர்த்தப் போகிறது. அதை முத்துவேல் க.ஸ்டாலின் செய்து முடிப்பார்.

இவ்வாறு விடுதலை ராஜேந்திரன் அவர்கள் பேசினார்.